

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.2.2026) தலைமைச் செயலகத்தில், காவல் நிலைய அதிகாரிகளின் பயன்பாட்டிற்கென 27 கோடி ரூபாய் செலவில் 300 புதிய நான்கு சக்கர வாகனங்களையும், மோப்ப நாய் பிரிவின் பயன்பாட்டிற்காக 10 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் 60 புதிய வாகனங்களையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.02.2026) முகாம் அலுவலகத்தில், மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலைஞானி கமல்ஹாசன் சந்தித்து பேசினார். மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் அருணாசலம் உடனிருந்தார்.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று (14.02.2026) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சார்பில் தாய் – சேய் நலனை மேம்படுத்தும் வகையில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு 100 கர்ப்பிணி பெண்களுக்கு தட்டு, மஞ்சள், குங்குமம், பூ, பழம் மற்றும் பொன்னான ஆயிரம் நாட்கள் குறித்த மடிப்பேடு அடங்கிய மங்களப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி, மாவட்ட நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் திருமதி.மா.நித்யா, வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# தி.மு.க.
# இளைஞர் அணி

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, மதுரை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**15.02.2026 ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.30 மணி | பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைகள் திறப்பு விழா | ஆலடிக்குமுளை, பட்டுக்கோட்டை. |
| காலை 11.00 மணி | மாநில வர்த்தக அணி துணைத் தலைவர் பழஞ்சூர் செல்வம் அவர்களின் இல்லத் திருமண விழா | வசந்தம் மஹால், பட்டுக்கோட்டை. |
| மதியம் 12.00 மணி | பட்டுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் திறப்பு விழா | பட்டுக்கோட்டை. |
| மதியம் 01.00 மணி | முன்னாள் அமைச்சர் அழகு திருநாவுக்கரசு அவர்களின் சிலை திறப்பு விழா | எடமேலையூர், மன்னார்குடி. |
| மாலை 06.00 மணி | தஞ்சாவூர் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு | செங்கிப்பட்டி, தஞ்சாவூர். |

**16.02.2026 திங்கள்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 09.30 மணி | நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா | புதுக்கோட்டை. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 13.02.2026

கலைஞர் 100
1924 - 2023











விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதி தனலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை நிகழ்ச்சியில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி, உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சரும் விழுப்புரம் மண்டலப் பொறுப்பாளருமான எம்.ஆர்.பன்னீர்செல்வம் மற்றும் விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர். உடன் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர்.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சேதுநாதன், மாசிலாமணி, கழகத் தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றியச் செயலாளர் ஆர்.விஜயக்குமார், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் ஏவிஆர்.கோபால்ராம், சுரேஷ் ஜெ.மனோகரன், வே.கௌதமன், முகமது இஸ்ரத், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.